

திருவள்ளூர் மாவட்டம் இரா.கி.பேட்டை ஒன்றியம் காண்டாபுரம் ஊராட்சி காண்டாபுரம் கிராமத்தில் ரூ.34.23 இலட்சம் மதிப்பீட்டில் ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளி புதிய கட்டிடம் கட்டும் பணிக்கு மாவட்ட கழக செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன், எம்.எல்.ஏ. அடிக்கல் நாட்டி பணியினை துவக்கி வைத்தார். உடன் ஒன்றிய செயலாளர் பா.சம்பத், வட்டார அலுவலர் கலைச்செல்வி, மாவட்ட சிறுபான்மையினர் அணி அமைப்பாளர் ஜி. சித்திக் அலி, ஒன்றிய நிர்வாகிகள் நாகப்பன், திருவேங்கடம், வெங்கடேசன், டில்லி பாபு, சரவணன், சாமிநாதன், கோபால், சுப்ரமணி, வேலு, சம்பத்,மாத்தையா, திருநாவுக்கரசு,மணி, இதையா, உள்பட கழக நிர்வாகிகள் அரசு அதிகாரிகள் பலர் உள்ளனர்.

### டி.ஆர்.பாலு எம்.பி. – அமைச்சர் பி.கே.சேகர்பாபு முன்னிலை! ஜோசப் சாமுவேல் தலைமை!

# அம்பத்தூர் வடக்குப் பகுதி சார்பில் கலைஞர் நினைவு நாள் பொதுக்கூட்டம்!

### தொல். திருமாவளவன் எம்.பி. – சுப. வீரபாண்டியன் – பீட்டர் அல்போன்ஸ் சிறப்புரை!

சென்னை, ஆக. 8

சென்னை கிழக்கு மாவட்ட தி.மு.க., அம்பத்தூர் வடக்கு பகுதி சார்பில், ஆகஸ்ட் 7 முத்தமிழறிஞர் 7ம் ஆண்டு நினைவு நாள் போராளி ஓய்வதில்லை நினைவை போற்றி மாபெரும் பொதுக்கூட்டம் விடுதலை சிறுத்தைகள் கட்சி தலைவர் திருமாவளவன் எம்.பி., திராவிட இயக்க தமிழர் பேரவை தலைவர் சுப வீரபாண்டியன், அகில இந்திய காங்கிரஸ் பேரியக்க மூத்த தலைவர் பீட்டர் அல்போன்ஸ் உரையாற்றுகிறார்கள்.

சென்னை கிழக்கு மாவட்ட தி.மு.க., அம்பத்தூர் வடக்கு பகுதி சார்பில், ஆகஸ்ட் 7 முத்தமிழறிஞர் 7ம் ஆண்டு நினைவு நாள் 'போராளி ஓய்வதில்லை' எனும் தலைப்பில் உன் வழியில் பணி செய்வோம் ஓரணியில் பகை வெல்வோம் எனும் தலைப்பில் இன்று (08.08.25 வெள்ளிக்கிழமை) மாலை 6 மணி அளவில் சென்னை மேனாம்பேடு ரோடு அம்பத்தூர் எஸ்டேட் அருகில் மாபெரும் பொதுக்கூட்டம் நடைபெறுகிறது.

இந்நினைவைப் போற்றும் பொது கூட்டத்தில் அம்பத்தூர் வடக்கு பகுதி கழக செயலாளர் ஜோசப் சாமுவேல் எம்எல்ஏ தலைமை வகிக்கிறார். கழகப் பொருளாளர், கழக நாடாளு மன்ற குழுத்தலைவர் டி.ஆர். பாலு எம்.பி, சென்னை கிழக்கு மாவட்டக்கழக செயலாளரும், இந்து சமய அறநிலையத்துறை (ம) சென்னை பெருநகர வளர்ச்சிக்குழும அமைச்சர் பி.கே. சேகர்பாபு, பி.கே.மூர்த்தி, எம்.சி, டி எஸ் பி ராஜகோபால் எம் சி எம்.டி.ஆர்.நாகராஜ், எல்.பி.எப்.மோகன், டாக்டர்.ஏ.பி.பூர்ணிமா எம்.சி, டாக்டர்.ஜி.சாந்தகுமார் எம்.சி, வி.ரமேஷ்(எ) நீலகண்டன் எம்.சி, ஜெ. பாலமுருகன், ஜி.வி.நாகவள்ளி எம்.சி, கு.கிருஷ்ண மூர்த்தி, து.ஆயிரம். அம்பத்தூர் வடக்கு பகுதி கழக நிர்வாகிகள்:

அ.செல்வம் க.முரளிபாபு க.கதிஜா மா.ரமேஷ் து.ஜெகநாதன் பி.ஆர்.இளங்கோவன் பா.பொற்செழியன் ரா.லட்சுமிரங்கசாமி மேனாம்பேடுஇ.ராமு அம்பத்தூர் வடக்கு கிழக்கு பகுதி வட்ட கழக செயலாளர்கள்: வி.ரவீந்திரன் பு.வீரா வெ.ராதாகிருஷ்ணன் மு.இரகு

மு.நடராஜன், து.செல்வராஜ், ஆர்.கதிரவன், கவிதா செல்லதுரை, கு.சங்கர். அம்பத்தூர் தெற்கு பகுதி வட்ட கழக செயலாளர்கள்: சி. சீனிவாசன், எம்.இ.சேகர் எம்.சி, நா.நெப்போலியன், இரா.டீக்கா, மாமன்ற உறுப்பினர்கள்: எஸ்.உமா எம்.சி, உஷா நாகராஜ் எம்.சி, கே.பொற்கொடி எம்.சி, எம்.கமல் எம்.சி ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

பொ.சேதுராமன் (எ) பொன்சேட்டு, ஏ.கே. டி.பாஸ்கர், பா.மாறன், டி.சுரேஷ்பாபு, ஆர்.ஜெயராமன், சோ.மதியழகன், எஸ்.கே.சதீஷ்குமார், எஸ்.எஸ்.சவரிமுத்து, எஸ்.எம். முருகானந்தம், ஏ.வி.தட்சிணாமூர்த்தி வரவேற்கின்றனர்.

இப்பொதுக் கூட்டத்தில் விடுதலை சிறுத்தைகள் கட்சி தலைவர் திருமாவளவன் எம்பி, திராவிட இயக்க தமிழர் பேரவை தலைவர் சுப வீரபாண்டியன், காங்கிரஸ் பேரியக்க மூத்த தலைவர் பீட்டர் அல்போன்ஸ் ஆகியோர் உரையாற்றுகிறார்கள்.

மேலும், இப்பொதுக் கூட்டத்தில் பெருநகர சென்னை மேயர் பிரியா ராஜன், ப.தாயகம்கவி எம்.எல்.ஏ, அ.வெற்றிஅழகன் எம்.எல்.ஏ, அம்பத்தூர் தொகுதி பொறுப்பாளர் சன்.முனியாண்டி. மாநில நிர்வாகிகள் ப.ரங்கநாதன், கே.எஸ்.இரவிச்சந்திரன், கே.சந்துரு, சி.மகேஷ்குமார், சங்கரிநாராயணன், தமிழன் பிரசன்னா, எஸ்.மணிமுடி ExMLA, வே.உமாகாந்த், கே.எஸ்.எம்.நாதன், எம். விஜயகுமார், என்.பி.எம். ஷேக்அப்துல்லா, பரிதிஇளம்சுருதி எம்.சி, ஆர்.வரதன், மாவட்ட கழக நிர்வாகிகள் கோ.ஏகப்பன் தேவஜவகர் ஜி.மகாதேவன், புனிதவதிஎத்திராசன் MC இசட். ஆசாத் MC மண்டல குழு தலைவர்கள் :

கூ.பீ.ஜெயின் MC, ஸ்ரீராமுலு சொ.வேலு MC பகுதி கழக செயலாளர்கள் வே. வாசுஐ.சி.எப்.வ.முரளிதரன் எ.நாகராசன்AC வி.சுதாகர் எம்.சாமிகண்ணு செ.தமிழ் வேந்தன் எஸ்.இராஜசேகர் எஸ்.முரளி, பொதுக்குழு உறுப்பினர்கள்: கோ.மணி எஸ்.பன்னீர்செல்வம் டி.வி. செம்மொழி பி.ஜெ.துளசிங்கம் பி.உதயசங்கர் சாவித்திரிவீரராகவன் எம்.இப்ராஹிம் கனி அ.நிர்மலாதேவி இரா.கலைச்செல்வி மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள்: வான வில்விஜய் பா.ஜெகதீஷ் க.வினோத் ஜி.ஜெ.பிரபு எஸ்.தனசேகர் ஆர்.டி.சங்கர் நானா நா.துலுக்காணம் ஜி. தாமோதரன் துரைகண்ணன் சுதாதீனதயாளன் MC ராஜேஸ்வரிஸ்ரீதர், பி.விஜயகுமார் எம். பெரோஸ்கான் எம்.விநாயகம் ஆர்.எஸ்.சித்திக் க. பா.பிரதீப்குமார் ம.அசோக்குமார் எல்.சம்பத்குமார் கா.ராஜ்முகமது இரா.வீரமணி

அம்பத்தூர் தெற்கு கிழக்கு பகுதி கழக நிர்வாகிகள்: மு.நடராஜன், து.செல்வராஜ், ஆர்.கதிரவன், கவிதாசெல்லதுரை, கு.சங்கர். அம்பத்தூர் தெற்கு பகுதி வட்ட கழக செயலாளர்கள்: சி.சீனிவாசன், எம்.இ. சேகர் எம்.சி, நா.நெப்போலியன், இரா.டீக்கா,

மு.சண்முகம் ஆ. சுந்தர்ராஜ் சீ.லோகநாதன் சு. மோகன்குமார் மு.விஜயகுமார் த.வ.லால், அம்பத்தூர் வடக்கு கிழக்கு பகுதி மாவட்ட பிரதிநிதிகள்: பொன்.நவராஜ்ரவி எம். குணசேகரன் ப.மதி ஆ. இரா.அருண் கோ.சேகர்லால் க.ஜீவா எஸ்.பி.அரிகிருஷ்ணன் மா.குப்புசாமி எம்.ஹரிகிருஷ்ணன் பி.வி. மூர்த்தி கே.செல்வம் கோ.முத்துகுமாரசாமி கோ. ராஜ்குமார் ந.குமரவடிவேல் ச.கோதண்டன் கோ.இன்பசேகரன் இ.நடராஜன் ஆர். விமலன் ஜெ.ஐயப்பன் எஸ். பரமசிவம், மாவட்ட பிற அணிகளின் துணை அமைப்பாளர்கள் ஸ்னோபகிருஷ்ணமூர்த்தி கு.வேணுகோபால் ஆசைஆரோக்கியம் தில்மகேஷ் இரா.பாலசுந்தர் அசோக்ஆண்ரூஸ் த.சுரேஷ்குமார் கழக மூத்த முன்னோடிகள், கழக நிர்வாகிகள் ஆகியோர் சிறப்பிக்கின்றனர்.

இப்பொதுக்கூட்டத்தில் வட்ட கழக செயலாளர் எம். கமல் எம்.சி. நன்றி கூறுகிறார்.

### முத்தமிழறிஞர் கலைஞர் நினைவு நாளை முன்னிட்டு

# மதுரவாயல் 153 வது வட்டத்தில் 500 நபர்களுக்கு அறுசுவை உணவு!

### காரம்பாக்கம் க.கணபதி வழங்கினார்! தி.சார்லஸ் – எஸ்.அருணாசலம் பங்கேற்பு!

சென்னை, ஆக. 08 -

சென்னை தெற்கு மாவட்டம், மதுரவாயல் தெற்குப் பகுதி, 153 வது வட்டம், போரூரில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 7 வது நினைவு நாளை முன்னிட்டு மாவட்டக் கழகச் செயலாளர், அமைச்சர் மா.சுப்பிரமணியன் ஆலோசனைப்படி, 153 வது வட்டத்தில் 20 இடங்களில் கலைஞர் அவர்களின் திருவுருவப் படத்திற்கு மாலை அணிவித்து மலர் அஞ்சலி செலுத்தப்பட்டது.

மேலும் வட்டக் கழகத்தின் சார்பில் கலைஞரின் படத்திற்கு மலர் அஞ்சலி செலுத்தி 500 நபர்களுக்கு அறுசுவை உணவு காரம்பாக்கம் க.கணபதி எம்.எல்.ஏ. வழங்கினார்.

உடன் வட்டக் கழகச் செயலாளர் தி.சார்லஸ், அருணாச்சலம், பி.எம். செல்வராஜ், க.நடராஜன், முரளிகிருஷ்ணன், பால்ரவி, ஸ்டான்லி, இஸ்மாயில், விஜயா, ஏழுமலை, செல்லமுத்து, பாலாஜி, தினா (எ) தினேஷ், மோகன், உதயகுமார், சூர்யபிரகாஷ், மார்க்கபந்து, பன்னீர், கந்தன், தூயவன், பார்த்திபன், வேதகிரி, சுகுமார், நாகராஜ், மனோகரன், சசி, சுரேன், ஜனார்த்தனன், செல்வராஜ், செல்வமணி, ஜெயராமன், மணிகண்டன், ராஜேந்திரன், சதீஷ்,மாறன், வேணுகோபால், கலைச்செல்வன் மற்றும் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

இந்நிகழ்வை பொன் ராமாசாமி, ரவி, பிரதீப் நிகழ்ச்சி ஏற்பாடு செய்தனர்.



முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நினைவு நாளையொட்டி முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நடைபெற்ற அமைதிப் பேரணியில் தி.மு.க. மாற்றுத்திறனாளிகள் அணி மாநிலச் செயலாளர் டி.எம். என்.தீபக்,அணியின் மாநில தலைவரும், தமிழ்நாடு மாற்றுத்திறனாளிகள் முன்னேற்ற சங்க தலைவருமான ரெ.தங்கம் தலைமையில் ஸ்கூட்டியில் மாற்றுத்திறனாளிகள் திரளாக அமைதிப் பேரணியாக சென்று முத்தமிழ் அறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் நினைவிடத்தில் மலர்த்தூவி மரியாதை செய்தனர். இந்த பேரணியில் ஏராளமான மாற்றுத்திறனாளிகள் பங்கேற்றனர்.



முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் 7–வது ஆண்டு நினைவுநாளை முன்னிட்டு ஆலந்தூர் தெற்கு பகுதி 167 வது வட்ட கழக செயலாளர் ஜெ.நடராஜன் தலைமையில் நேற்று 07.08.2025 முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவப்படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தி, ஏழை எளிய மக்கள் மற்றும் தூய்மை பணியாளர்கள் 500 நபர்களுக்கு ஆலந்தூர் தெற்கு பகுதி கழக செயலாளரும், 12–வது மண்டல குழு தலைவர் என்.சந்திரன் வழங்கினார். இந்நிகழ்ச்சியில் எம்.எஸ். கே.இப்ராகிம், ஆர்.ஆர்.ஜெயராம் மார்த்தாண்டன், ஆர்.சுந்தர்ராஜன், ஏ.சாலமோன், ஆர்.பாபு, ஈ.ரமேஷ், வட்ட கழக செயலாளர்கள் இ.உலகநாதன், டி.ஜேசுதாஸ், கே.ஆர்.ஜெகதீஸ்வரன், ஏ.வேலவன், ஏ.ஆர். சரவணா, வெ.பாண்டி செல்வி, உள்ளிட்ட கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

# கலைஞர் நினைவு நாளில், முத்திரைப் பதிக்கும் இளைஞர் அணி!




தமிழ்நாட்டில் இன்று நாம் காண்கின்ற, அனுபவிக்கின்ற நவீனங்கள் அனைத்தையும் தன் சிந்தையில் செதுக்கிச் செயல்வடிவு தந்து, இந்தியாவுக்கே முன் மாதிரி மாநிலமாக உருவாக்கியவர் நமது உயிரினும் மேலான முத்தமிழறிஞர் கலைஞர். அவரது 7ஆம் ஆண்டு நினைவு நாள் ஆகஸ்ட் 7 அன்று, உணர்வெழுச்சியை ஊட்டியது கழக இளைஞர் அணி நடத்திய கருத்தியல் முன்னெடுப்பு நிகழ்ச்சி.

தன் சாவிலும் போராட்டத்தை நடத்திக் காட்டி நம்மையெல்லாம் ஆட்கொண்ட மானமிகு சுயமரியாதைக்காரரின் நினைவுநாளை, உண்மையிலேயே அவர் இருந்திருந்தால் விரும்பும் வகையில் அவரது நினைவைப் போற்றும் நாளாக்கியது, இளைஞர் அணிச் செயலாளர், மாண்புமிகு துணை முதல்வர் அவர்களின் முன்னெடுப்பு.

முரசொலி நாளேடும், கலைஞர் தொலைக்காட்சியும் இணைந்து நடத்தும் கலைஞர் மாணவப் பத்திரிகையாளர் திட்டம், இளம் திராவிட இயக்க ஆய்வாளர்களை ஊக்குவிக்க கலைஞர் நிதி நல்கைத் திட்டம் ஆகியவற்றை நமது திராவிட மாடல் நாயகர் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தொடங்கி வைத்து, முத்தமிழறிஞர் பதிப்பகத்தின் 8 நூல்களையும் வெளியிட்டார். முதலிரண்டு திட்டங்களும் மாணவர்கள் நலனில் கழகம் கொண்டுள்ள அக்கறைக்கு தெள்ளத் தெளிவான சான்றாக இருக்கிறது.

திராவிட இயக்கச் சிந்தனை கொண்ட ஊடகர்களை உருவாக்குவதன் மூலம் எதிர்காலத்தில் அறிவார்ந்த ஊடகச் சமுதாயத்தை உருவாக்க அடிநாட்டியிருக்கிறார் நம் முதலமைச்சர் அவர்கள். இதழியல் முன்னோடியாக முத்தமிழறிஞர் கலைஞரை உயர்த்திப் பிடிக்கும் இந்த முயற்சி மாணவர்கள் மத்தியில் பெரும் வரவேற்பினை பெற உள்ளது என்பதில் ஐயமில்லை.

பத்திரிகையாளர்கள் சுதந்திரமாகச் செயல்பட முடியாதபடி அறிவிக்கப்படாத பாசிச நெருக்கடிக் காலகட்டத்தை உருவாக்கி இருக்கிறது ஒன்றியத்தை ஆளும் பாஜக. ஊடகர்கள் சுதந்திரமாகச் செயல்பட்டால் சுவாசத்தை நிறுத்துவோம் என்று நாடே சங் பரிவாரங்களின் வேட்டைக்காடாக மாற்றப்பட்டுள்ளது. பாஜகவின் பாசிச முகத்திரையைக் கிழிக்க முற்படும் யாவரும் காலவரையற்றுச் சிறைச்சாலை களில் அல்லப்படுகின்ற காலகட்டத்தில், அதனை எதிர்ப்பதற்கு வலுவான நான்காம் தூணாக ஊடகத் துறையை பலப்படுத்த உள்ளது கலைஞர் மாணவப் பத்திரிகையாளர் திட்டம்.

நாடெங்கும் கல்விச் நிலையங்கள், பாடத்திட்டங்கள் பாசிசத்தின் கோரப்பிடியில் சிக்கித் தவிக்கிறது. NCERT வெளியிடுகின்ற பாடப் புத்தகங்கள் எல்லாம் காவிமயமாக்கப்பட்டு, உயர்கல்விக்குச் செல்லுகின்ற மாணவர்களின் மூளையெல்லாம் காவிச்சலவை செய்யப்படுகிறது. கோமியமும் சாணமும் ஆய்வுப் பொருள்களாகவும், நாடெங்கும் சனாதனம் மட்டுமே பேசுபொருளாகவும் ஆக்கப்பட்டுள்ளது அத்தகைய காலகட்டத்தில், அந்தச் சதிகளை முறியடித்து நாட்டைக் காக்க இளம் ஆய்வாளர்களை ஊக்குவிக்க வருகிறது கலைஞர் நிதி நல்கை திட்டம். அந்த ஆய்வுகளை பதிப்பிக்க தயாராக உள்ளது முத்தமிழறிஞர் பதிப்பம். இந்த முயற்சிகள் எல்லாம் திராவிட முன்னேற்றக் கழகம் தான் பாசிசத்துக்கு எதிராக இந்த நாட்டைக் காக்கும் ஒரே சக்தி என்பதை தெளிவாக்குகிறது.

திராவிட மாடல் பயிற்சிப் பாசறை, நீட் எதிர்ப்புக் கையெழுத்து இயக்கம், தொகுதிதோறு, கலைஞர் நூலகம், அங்கு போட்டித் தேர்வுகளுக்கான பயிற்சி, வாசகர் உரையாடல், இளம் பேச்சாளர்கள் தேர்வு, பாக இளைஞர்கள் தேர்வு என்று தொடர்ந்து கழகத்தின் வேர்களை வலுப்படுத்தும் இளந்தலைவரின் முன்னெடுப்புகளில் புதுப்பாய்ச்சலாக நேற்றைய அறிவிப்புகள் வந்திருக்கின்றன.

கலைஞர் தன் காலமெல்லாம் எதற்காகப் போரிட்டாரோ அந்த இலட்சியத்தை நிறைவேற்றிடவும், தந்தைப் பெரியாரும் பேரறிஞர் அண்ணாவும் கண்ட கனவுகளை நனவாக்கிடமும், இளைஞர் அணியின் முன்னெடுப்பினை நமது கழகத் தலைவர் திராவிட மாடல் நாயகர் மாண்புமிகு முதல்வர் அவர்களும் கழக இளைஞர் அணிச் செயலாளரும் மாண்புமிகு துணை முதல்வர் அவர்களும் கலைஞரது நினைவு நாளில் இந்தத் திட்டங்களை அறிவித்தது நாட்டுக்கே முன்னோடி! கலைஞரது நினைவுக்கு ஓர் மணி மாலை!

தமிழ் இனக் காவலர், முத்தமிழறிஞர் கலைஞரின் 7ஆம் ஆண்டு நினைவு தினத்தில் நமக்கு வழங்கப் பட்டுள்ள இந்தத் திட்டங்களை தமிழ் மக்களிடம் கொண்டு சேர்த்து, "புதியதோர் உலகு செய்வோம்"!

"அறம் வெல்லும்; அநீதி வீழும்"



**தமிழ் கா.அமுதரசன்**
மாணவர் அணி மாநில
துணைச் செயலாளர்



ஆர்.கே.நகர் கிழக்கு பகுதி சார்பில் முத்தமிழறிஞர் கலைஞர் நினைவு நாளை முன்னிட்டு திருவுருவப் படத்திற்கு மலர் தூவி அஞ்சலி செலுத்தி மதிய உணவு வழங்கும் நிகழ்ச்சி பகுதி செயலாளர் இரா.லட்சுமணன் தலைமையில் நடைபெற்றது. மாவட்ட பொறுப்பாளர் ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ, ஜே.ஜே.எபினேசர் எம்.எல்.ஏ ஆகியோர் உணவு வழங்கினர். ஆர்.வெற்றிவீரன், என்.மருதுகணேஷ், என்.அனிபா, ஆர்.டி.ராஜா, கே.பாலு, எம்.வேதலட்சுமி, கே.பி.சதீஷ்குமார், வெ.சு.சத்யநாராயணன்,ஒலி ஒளி பாபு, என்.எம்.கதிரேசன், தா.வ.மு.கஜேந்திரன், நா.கோதண்டன், மா.நாகராஜன், ப.குமார், ச.தமிழ்ச்செல்வன், பொ.து.ராஜா, ஜெ.பிரேம் ஆனந்த், குமாரிநாகராஜன் எம்.சி, எம்.எம்.சாமி, கே.மோகன், மா.ரூபசங்கர், டி.ஆர்.தணிகாசலம், பூங்கோதை, ஏ.வெங்கடேஷ், ராஜ்குமார் உள்ளிட்ட அனைத்து கழக நிர்வாகிகள் பங்கேற்றனர்.



முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் 7 வது ஆண்டு நினைவுநாளை முன்னிட்டு நேற்று ஆலந்தூர் தெற்கு பகுதி 166வது வட்டத்தில் பகுதி வர்த்தக அணி அமைப்பாளர் மீன் மோகன் ஏற்பாட்டில், பகுதிச் செயலாளர் என்.சந்திரன் எம்.சி., ஏழை எளிய பொதுமக்கள் 500 நபர்களுக்கு அறுசுவை உணவு வழங்கினார். இந்நிகழ்ச்சியில் ஆலந்தூர் வடக்கு பகுதி கழக செயலாளர் பா.குணாளன், கோல்டு டி.பிரகாஷ், ஆர்.ஆர்.ஜெயராம் மார்த்தாண்டன், இ.உலகநாதன், ஜெ.நடராஜன், டி ஜேசுதாஸ் கே.ஆர். ஜெகதீஸ்வரன் ஏ.வேலவன், ஏ.ஆர்.சரவணா, ஏ.சாலமோன் எம்.சி., உள்ளிட்ட கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.